# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**உள்ளக சுற்றுநிருபம் -து/உ/2018/2**

02.05.2018

வளாக முதல்வர்

சகல பீடாதிபதிகள்

சகல துறைத்தலைவர்கள் / பகுதித்தலைவர்கள்

## ஊர்வலங்கள் பேரணிகள் மற்றும் ஒலிபெருக்கி பாவனை

பல்கலைக்கழகத்தில் ஊழியர்கள் மற்றும் மாணவர்களினால் பல்வேறு விதமான நிகழ்வுகள் பல்கலைக்கழக வளாகங்களில் நடாத்தப்பட்டு வருகின்றன. இவ்வாறான ஊர்வலங்கள், பேரணிகள், ஒன்றுகூடல்கள், விழாக்கள் என்பன உரிய சட்ட திட்டங்களுக்கு அமைவாக நடாத்தப்படல் வேண்டும். மேற்படியான நிகழ்வுகளை துணைவேந்தரின உரிய முறையான அனுமதி முற்கூட்டியே பெறப்படல் கட்டாயமானதாகும்.

இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்கு செய்து நடாத்துபவர்கள் உரிய விடயங்களை கருத்திற்கெடுக்காது நடாத்துவதனால் பல்வேறு அசௌகரியங்களும் குழப்பங்களும் ஏற்படுகின்றன என்றும் இவை பாரிய முரண்பாடுகளை பல்கலைக்கழக ஊழியர், மாணவர் என்போரிடையே ஏற்படுத்துவதாக அமைகின்றன என்றும் அத்தோடு பல்கலைக்கழக சுமுகமான செயற்பாட்டிற்கும் கல்வி நடவடிக்கைகளுக்கும் இடையூறுகளை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்படுவதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. மேலும் பல்கலைக்கழக சமூகத்தின் கௌரவத்திற்கு பங்கம் ஏற்படுத்தக்கூடிய வகையில் நடாத்தப்படும் சந்தர்ப்பங்கள் எழுந்துள்ளன என்றும் பல்கலைக்கழக சுற்றுவட்டாரத்தில் உள்ள பொதுமக்களுக்கும் இவற்றால் இடையூறுகள் ஏற்படுவதாகவும் அறிய தரப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பின்வரும் நடைமுறைகளை கண்டிப்பாகச் செயற்படுத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

- உரிய நிகழ்வுகளை ஏற்பாடு செய்யும் சங்கங்களோ, அமைப்புக்களோ அவற்றுக்குரிய விண்ணப்பங்களை குறைந்தது ஒரு வாரத்திற்கு முன்னர் துணைவேந்தர் அலுவலகத்தில் கிடைக்கக்கூடியவாறு கையளிக்க வேண்டும்.
- இதற்குரிய அங்கீகாரம்/ அனுமதி துணைவேந்தர் அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்றுள்ளதை உறுதிப்படுத்திக்கொண்டு அந்நிகழ்வுகளின் ஏற்பாடுகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். யாதாயினும் முறையானதொரு காரணத்தின் பேரில் அனுமதி மறுக்கப்படும் அவசியம் நேரிடலாம் என்பதால் அவ்வாறான அனுமதி கிடைக்காத சந்தர்ப்பங்களில் அந்நிகழ்வுகளை நடாத்துவதனை உடனே நிறுத்தி வைப்பதற்கு உரிய நடவடிக்கையை விண்ணப்பதாரிகள் எடுக்க வேண்டும்.
- நிகழ்வுகள் முடியும் போது அல்லது முடிந்த பின்னர் உரிய முறையில் நிகழ்வு நடைபெற்ற இடங்களை சீர்செய்வதற்கு விண்ணப்பித்த அமைப்பு ஒழுங்குகளை மேற்கொண்டிருக்கின்றமையை உறுதிப்படுத்த வேண்டும்.

- உள்ளக ஒலிபெருக்கி பாவனை மற்றும் வெளியக ஒலிபெருக்கி பாவனை, பேரணிகள், பந்தல் மேடை அமைப்புக்கள் என்பவை குறித்து உரிய முறையில் தகவல்களை வழங்கி முன் அனுமதிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.
- பல்கலைக்கழகத்தினதும் அரசாங்கத்தினதும் கொள்கைகள், மரபுகள், சட்டதிட்டங்கள், நற்பெயர் என்பவற்றிற்கு இணக்கமான முறையினடிப்படையிலேயே, இவ்வாறான எல்லா ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதனை நிகழ்வுகளுக்காக அனுமதி கோரி விண்ணப்பிப்பவர்கள் விண்ணப்பத்தினூடாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

இது தொடர்பான விடயங்களை தகவலுக்காக தங்கள் பீடங்கள், திணைக்களங்கள், பிரிவுகளில் கடமையாற்றும் ஊழியர்களுக்கும், ஊழியர் சங்கங்களுக்கும், அனைத்து மாணவர்களுக்கும், மாணவ ஒன்றியங்களுக்கும், மாணவ அமைப்புக்களுக்கும் வழங்கி உரிய நடவடிக்கை எடுக்கவும்.

துணைவேந்தர்.

VICE CHANCELLOR
University of Jaffna
Jaffna, Sri Lanka

பிரதி : பதிவாளர்

நூலகர்

பிரதிப்பதிவாளர்/ பொது நிர்வாகம்

சிரேஷ்ட மாணவ ஆலோசகர்

சிரேஷ்ட பொருளாளர்

உதவிப்பதிவாளர் /நலச்சேவைகள்

பிரதம பாதுகாப்பு அதிகாரி

மாணவ ஒழுக்காற்று அதிகாரி